# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

**OS. No.150/2022 நாள்.02.07.2025**

DW1- **திரு.மயில்வாகனம், த /பெ.திரு.மனோகரன்**

**வாதிதரப்பில் குறுக்குவிசாரணை**

1ஆம் பிரதிவாதி தற்போதும் வழக்கிற்கு முன்பும் சென்னையில் தங்கி வேலை செய்கிறார் என்றால் ஆமாம். அந்த அடமானம் வைத்த 2019 க்கு முன்பும் சென்னையில் தான் வசித்தார் என்றால் ஆமாம். அங்கு என்ன வேலை செய்கிறார் என்றால் பொறியாளராக வேலை செய்கிறார். என் அண்ணன் என்ன படித்துள்ளார் என்றால் பொறியியல் படித்துள்ளார். நான் B.L படித்துள்ளேனா என்றால் இடைநிற்றல் ஆகிவிட்டேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் கண்ட விலாசத்தில்தான் வசிக்கிறேனா என்றால் ஆமாம். 14.10.2019 அடமானம் வைத்த காலத்திலும் நான் கூட்டுறவு சங்க காலனியில் வசித்தேன் என்றால் ஆமாம். வழக்குரையில் என்னுடைய பழைய முகவரியான எல்லையம்மன் கோவில் முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அதை திருத்தம் செய்ய மனு தாக்கல் செய்யபட்டு திருத்தம் செய்யபட்டது என்றால் ஆமாம். மேற்கண்டதன் பேரின் மேல் நான் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் ஆமாம். 14.10.2019 தேதி அன்று அடமான பத்திரம் எழுதி கொடுக்க சென்னையிலிருந்து தஞ்சை வந்தார் என்றால் ஆமாம். வழக்கின் வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை நான் பெற்றுகொண்டேன் என்றால் ஆமாம். 1ஆம் பிரதிவாதி பெறாமல் திரும்பியது என்றால் ஆமாம். என் அண்ணனுக்கு விபரம் நான் அறிவிப்பை பெற்றதால் சொன்னேன் என்றால் ஆமாம். அந்த அறிவிப்பிற்கு நானும் என் அண்ணனும் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.6 ஆவணம் எங்கிருந்து நகல் பெறபட்டது எங்கு வாங்கபட்டது என்றால் நான் தயார் செய்தேன். அந்த ஆவணத்தில் 1ஆம் பிரதிவாதியின் கையொப்பம் ஏதும் இல்லை என்றால் ஆமாம்.,என் கையெழுத்துதான் உள்ளது. இந்த ஆவணத்தை எந்த தேதியில் எதற்காக தயார் செய்தோம் என்றால் வழக்கில் விபரம் சொல்லுவதற்காக நான் எழுதி வைத்திருந்த தகவலின் அடிப்படையில் தயார் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ6இல் சொல்லபட்டுள்ள தகவல்கள் உண்மையானவை என்பதை காண்பிக்க வேறு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். என் தாயாரின் ஒய்வூதியத்திலிருந்து வட்டி கட்டியதாக சொல்லுகிறேனா அதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வீட்டிற்கு போய் கையில் பணமாகதான் கொடுப்பேன் அவர் எதுவும் ரசீது தரமாட்டார். கோவிந்தாராஜ்க்கும், எனக்கும் கடன் கொடுக்கல், வாங்கல் இருந்தது என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் தாயாரை அழைத்து விசாரித்தால்

அவர் ஒய்வூதியத்தை வட்டி கொடுக்க எனக்கு பணமாக கொடுத்து உதவினரா என்று தெரியவரும் என்றால் ஆமாம். வாதி தாக்கல் செய்த ஆவணத்தில் எனக்கு 15லட்சம் அடமான கடன் கொடுத்த விபரத்தை வருமான வரி கணக்கில் சொல்லியுள்ளதை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. வருமான வரி கணக்கு ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய மனு போட்டிருந்தார் என்றால் ஆமாம். அதற்கு எதிருரை தாக்கல் செய்தோம் என்றால் ஆமாம். அந்த மாதிரி எதிருரை தாக்கல் செய்யும்போது மேற்படி விபரத்தை தெரிந்துகொண்டுதான் தாக்கல் செய்தோம் என்றால் இல்லை. வாதிக்கு 14.10.2019 அடமான பத்திரத்தின் படியான கடனுக்கான அசலோ, வட்டியோ கொடுக்கவில்லை என்றால் அந்நாரிடம் கடன் வாங்னிால்தானே கொடுக்கவேண்டும். நான் ஆக்டிங் டிரைவராக போகும் வழக்கம் உள்ளது என்றால் ஆமாம். வாதிக்கு ஆக்டிங் டிரைவராக போய்உள்ளேன் என்றால் இல்லை. வாதிக்கு ஆக்டிங் டிரைவராக போனதின் அடிப்படையில் ஏற்பட்ட பழக்கத்தினால் வாதியிடம் அடமான கடன் வாங்கினேன் என்றால் இல்லை. வாதியிடம் வாங்கிய அடமான தொகை ஏமாற்றுவதற்காக பின்னிட்டு கடனே வாங்கவில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. 14.10.2019 அடமான பத்திரத்தின் அடிப்படையில் 1, 2 பிரதிவாதிகளான நாங்கள் அசலையும், வட்டியையும் திரும்பி கொடுக்க கடமை பட்டவர் என்று சொன்னால் வாங்காத கடனை திரும்பி கொடுக்க வேண்டியதில்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.